RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2049

# பழங்கால இலக்கியங்களில் சமுதாயச் சிந்தனைகள்

## சி. அமுதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக் கல்லூரி, புதுக்கோட்டை- 622001, தமிழ்நாடு இந்தியா

# Social thoughts in Ancient Literature

## S. Amutha [a, *]

[a] Department of Tamil, Govt Arts College for Women, Pudhukottai- 622001, India

* Corresponding Author: drsatamil@gmail.com

Received : 06-05-2020
Accepted : 11-09-2020

Check for updates

**ABSTRACT**

The society of ancient times was excellent at all levels. Between the third century B.C. and the 3rd century A.D. Considered to be between the 2nd and 3rd centuries, the Sangam age tamil nadu was a period of excellence in art, life, politics and education. The ancient Tamil literature was divided into two parts, the Agam and Puram. The Aga literature sings the morals of the love heroism of the ancient Tamils. Pura literature sings warfare and social life. The study deals with the life and society of the ancient peoples and the way of life in harmony with moral thoughts and nature.

**Keywords:** Ancient, Society, Life, Peoples

## முன்னுரை

பழங்ககாலச் சமுதாயம் எல்லா நிலைகளிலும் சிறந்திருந்தது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலமாகக் கருதப்படும் சங்ககாலத் தமிழகம் கலை, வாழ்வு, அரசியல், கல்வி என எல்லா நிலைகளிலும் சிறந்திருந்த காலமாகும். பழங்கால தமிழ் இலக்கியங்கள் அகம், புறம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டன. அக இலக்கியங்கள் பண்டைத் தமிழர்களின் காதல் வீரம் என்னும் ஒழுக்கங்களைப் பாடின. புற இலக்கியங்கள் போரியலையும் சமுதாய வாழ்வியலையும் பாடிய வகையில் அமைந்துள்ளது. பழங்கால மக்களின் வாழ்வியலையும் சமூகத்தையும் அறசிந்தனைகள், இயற்கையோடு இயைந்த வாழ்வியலை எடுத்துரைக்கும் விதமாக அவ்வாய்வு அமைகிறது.

## பண்டையத் தமிழரின் வாழ்வியல்

'பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கையை நடத்தினர். அவ்வாழ்க்கையை உழைப்பு அழகுபடுத்தியது. எளிமையும் அழகையும் ஆரம்பத்தில் வழங்ககூடியது. காலம் செல்லச் செல்ல ஏற்பட்ட மாற்றத்தை முன்னேற்றம் என்று கருதுவர். ஆரவாரத்திலும் ஆடம்பரத்திலும் முடிந்தது. சமூக வேற்றுமைகள் பெருகின' என்று வே.தி. செல்லம் சங்ககாலச் சமுதாயத்தைப் பொதுவான நிலையில் அறிமுகம் செய்கின்றார் (Selvam, 2002).

சங்க இலக்கியங்கள் பல்வேறு சமூகமக்களின் வாழ்வியலில் ஒற்றுமைத் தன்மையைக் காணமுடிகிறது. சேதுராமன், 'சங்க இலக்கியங்கள் சமயச் சார்பற்ற பொதுவான சமுதாய நடவடிக்கைகளைப் பற்றியே விளக்குகின்றன (Sethuraman, 2017). சங்ககாலச் சமுதாயம் என்பது தன்னிறைவு பெற்ற நல்ல சமுதாயமாக இருந்தது. அதே நேரத்தில் சமுதாய ஏற்றத் தாழ்வுகளும் பெருகி இருந்தன. துவக்க காலத்தில் இச்சமுதாயம் பழங்குடியினர் சமுதாயமாகவே இருந்தது. சில பழங்குடியினர் மலைப் பிரதேசங்களிலும், தென்னிந்திய எல்லைப் பகுதிகளிலும் வசித்து வந்தனர். அவர்களில் நீலகிரிப் பகுதியில் வாழ்ந்த தோடர்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருந்த தரகர்கள் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்' என்று குறிப்பிடுகிறார். இதனால் பல சமுதாய மக்களால் ஒன்று சேர்ந்து கட்டமைக்கப்பட்டதே சங்கச் சமுதாயம் என்று விளங்கும்.

## சங்க சமூகம்

அக இலக்கியங்களில் முதல் கரு உரி எனப் பகுக்கப்பட்ட மூன்று பொருள்களையும் சார்ந்து விளங்கிய அக வாழ்வியல்முறை தனக்கெனத் தனித்த ஒழுகலாற்றைக் கொண்டிருந்தது. காதல், அதாவது களவு மணம் பெரும்பான்மையும் போற்றப்பட்டது. கல்வி சிறந்திருந்தது. கள் குடித்தல் தவறான ஒழுக்கமாகக் கொள்ளப்படவில்லை. பரந்த போர்க்களத்தில் போர் செய்து வெற்றி பெறுவது ஆண்மகனுக்குரிய கடமையாகவும்; இல்லறத்தைச் சிறக்கச் செய்தல் பெண்ணுக்குரிய கடமையாகவும் இருந்தன.

சமூகம் என்னும் அமைப்பு மிகவும் பழமையானது. பல்வேறு மக்களும் இணைந்து வாழும் சமுதாயம் மக்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டதாகும். அன்னிதாமசு, 'சமூகம் என்பது இணைந்து வாழும் மக்கள் தொகுதியைக் குறிக்கும் (Annithamasu, 2000). தனிமனிதர், குடும்பங்களாக, குழுமங்கலாக, குழுக்களாக, குடிகளாகச் சேர்ந்து, ஒருவரையொருவர் வாழ்வுக்காகவும், பாதுகாப்புக்காகவும், வளர்ச்சிக்காகவும், பெருக்கத்திற்காகவும், சார்ந்தும் சேர்ந்தும் வாழும்போது சமுதாயம் உருவாகிறது. இதனால் மனிதன் பிறக்கும்போதே சமுதாயத்திற்குள் புகுகிறான். பிறப்பால் ஏற்படுகின்ற இந்தச் சமுதாய உறுப்பினர் நிலை ஒன்று. இதற்கு வேறாக, திருமணம் காரணமாக, சமுதாயத்தில் மற்றொரு உறுப்பினர் நிலை பெறுவதும் உண்மை. எனவே பிறப்புறவும் மணவுறவும் ஒவ்வொருவருக்கும் சமுதாய உறுப்பினர் நிலை அளிக்கிறது'. என்று சமுதாய இயல்பைக் குறிப்பிடுகின்றார்.

## பொழுதுகளில் சமுதாயச் சிந்தனை

பண்டைய தமிழ்ப் புலவர்கள் இலக்கியம் படைப்பதற்கு இயற்கையைக் களமாகக் கொண்டனர். அதன் அடிப்படையில் நிலத்தையும் பொழுதையும் பிரித்தனர். பெரும்பொழுதுகள் ஆறாகவும் சிறுபொழுதுகள் ஆறாகவும் பாகுபாடு செய்யப்பட்டன. பெரும்பொழுதுகள் ஆண்டின் பகுப்பாகவும் சிறுபொழுதுகள் நாளின் பகுப்பாகவும் அமைந்தன. திணைகள்தோறும் நிகழ்கின்ற செயல்கள் எல்லாம் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டவை. திணைகள் பல்வேறு நிலவியல் சூழல்களையும் வாழ்வியல் சூழல்களையும் கொண்டு விளங்குபவை என்பதனால் வாழ்வியல் சூழல்களையும் சமுதாயச் சூழல்களையும் பொழுதுகளின் மூலம் தெளிவாக அறியமுடிகிறது.

## இயற்கையோடு இயைந்த வாழ்க்கை

பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்ததாக இருந்தது. அவர்களின் வாழ்க்கைமுறை இயற்கையோடு இயைந்து கட்டமைக்கப்பட்ட வாழ்க்கையாக இருந்தது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நிலவியல் சூழலுக்கு ஏற்றார்போல மக்களின் வாழ்க்கைமுறை அமைந்திருந்தது. சங்க காலத்தின் தொடக்கம் வளம் நிறைந்ததாகவும் குழப்பம் இன்றியும் அமைந்திருந்தது. சங்க காலத்தின் இறுதி, குழப்பம் மிக்கதாக அமைந்தது.

வே.தி. செல்லம், 'சங்ககாலத்து மக்கள் நிலத்தோடு ஒத்த வாழ்வினை நடத்தினர் என்று தொல்காப்பியம் காட்டுகின்றது. நிலம் நால்வகைப்பட்டது. (தமிழகத்தில் பாலை நிலையான பிரிவன்று). நானிலத்துக்கும் ஏற்றவாறு மக்களும் வாழ்ந்தனர். நிலம் இசைவு கொடுக்கத் தொழிலைச் செய்தனர். உழைத்து வாழ்ந்தனர். உழைப்பை உயர்வாகக் கொண்டனர். எளிமையாக வாழ்ந்தனர். அந்த எளிமையில் இனிமை கண்டனர். விவசாயப் பொருளாதாரத்தை நம்பும் சமூகத்தின் இன்ப வாழ்விது. இவற்றுக்குப் புறம்பாகப் பாலையிருந்தது. சமூகம் விரும்பாத தொழிலைப் பாலை தூண்டியது' என்று குறிப்பிடுகிறார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானில ஒழுக்கங்களில் மருதத்திணையில் சிறுசிறு தவறுகள் சுட்டிக் காட்டப்படுகிறது.

தலைவன் பரத்தையின் வழிப் பிரிந்து செல்லும் தன்மை சுட்டிக் கூறப்படுகிறது. ஆனால் பாலைத்திணையே மற்ற திணைகளில் இருந்து மாறுபட்டதாக விளங்குகிறது. கொள்ளையிடலும் பொருள்களைச் சூறையிடலும் ஆறலைக் கள்வர்கள் வழிச் செல்பவர்களைத் துன்புறுத்துவதும் பாலையில் தான் நிகழ்கிறது. கடும் வெயிலும் வறட்சியும் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தும் மாற்றத்தைத் திணைகளும் அவற்றின் கூறான பொழுதுகளும் தெளிவுபடுத்தியிருக்கின்றன.

## காதலும் இயற்கையும்

ஒருவரின் மேல் ஒருவர் அன்புகொண்டு களவு வாழ்க்கை வாழும் தலைவனும் தலைவியும் தங்களின் காதல் நிறைவேற ஆசை கொள்வது இயற்கை. ஆயினும், களவு வாழ்க்கை நினைத்ததும் கற்பாக மாற்றிக்கொள்ளும் எளிமைத் தன்மை உடையதல்ல என்பதைக் குறிஞ்சித் திணை கூதிர், முன்பனி, யாமம் ஆகிய பொழுதுகளின் வழியாக விளக்கியிருக்கிறது. ஊழினால், தெய்வம் கூட்டுவித்தலால் தலைவியைச் சந்திக்கும் தலைவன் பல்காலும் அவளை இயற்கைப் புணர்ச்சியில் பகலிலும் யாமப் பொழுதிலும் கூடி, அவளை விட்டுப் பிரிய இயலாத மனநிலை உடையவனாக இருக்கிறான். ஆனால் அவனுடைய சந்திப்பிற்குக் களவுக்காலம் எல்லா நாட்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. குறிஞ்சி, புணர்தலும் புணர்தல் நிமித்தமும் கொண்டது எனினும் அதிலும் துன்பங்கள் உண்டு என்பதைப் பொழுதுகள் எடுத்துக்காட்டத் தவறவில்லை. களவில் தலைவியைச் சந்திக்க வரும் தலைவனுக்கு இயற்கையே சிலவேளைகளில் இடையூறாக அமைந்து விடுகிறது.

குறிஞ்சித்திணையில் புணர்தலும் அதன் நிமித்தமுமாக நிகழ்கின்ற தலைவன் தலைவியின் சந்திப்பு முல்லைத் திணையில் இருத்தலாக மாற்றமடைகிறது. தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து பரத்தையுடன் தொடர்புகொள்கிறபோது அதுவே ஊடலாகப்

பரிணமிக்கிறது. தலைவியின் இருத்தல் நீள்கின்றபோது அதுவே இரங்கலாக வடிவம் பெறுகின்றது. பிரிவு பாலையாகிறது. ஒவ்வொரு நிலத்தின் தன்மைக்கு ஏற்பவும் வாழ்வியல் சூழல்களுக்கு ஏற்பவும் பொழுதுகள் மாந்தருக்குள் ஏற்படுத்திய தாக்கம் பற்பல நுட்பமான சிந்தனைகளை வெளிக்காட்டுவதாக அமைகிறது. பொழுதுகளில் பல்வேறு நிகழ்வுகள் விளக்கமாகப் பேசப்பட்டமையின் ஐந்திணைகளிலும் நிகழும் ஒழுக்கங்களின் வழியாகச் சமுதாயச் சிந்தனைகளை இனிக் காணலாம்.

## இயற்கைப் புணர்ச்சி

சங்க இலக்கியங்களில் பேசப்படும் ஐந்திணைகளும் தன்னுள் பல்வேறு நுட்பமான கூறுகளைக் கொண்டவை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் திணைகளுக்குரிய ஒழுக்கங்களான புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்னும் கூறுகள் அவ்வத்திணைகளுக்குச் சிறப்பாக இருக்கின்றன. எனினும், அதே ஒழுக்கங்கள் பிறதிணைகளில் நிகழாமல் இல்லை. ஒவ்வொரு திணையிலும் எல்லா ஒழுக்கங்களும் உண்டெனினும் சிறப்பான நிலையிலேயே ஐந்து நிலப் பாகுபாடுகளும் அவற்றிற்குரிய ஒழுக்கங்களும் தெளிவுபடுத்தப்பட்டன.

தலைவனும் தலைவியும் இயற்கையாக ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டுச் சந்திக்கும்போது ஊழ்வினையின் வலிமையால் அவர்களுக்குள் உறவு நிச்சயிக்கப்படுகிறது. இதற்கு, குறிஞ்சிப்பாட்டு மிகச் சிறந்த சான்றாகிறது. தலைவியும் தோழியும் தாயின் அறிவுறுத்தலால் தினைப்புனம் காக்கச் செல்கின்றனர். ஊழின் வலியால் அங்கு தலைவனைச் சந்திக்கின்ற சூழல் ஏற்படுகிறது. தோழியும் தலைவியும் தினைப்புனக் காவலில் ஈடுபடுகின்றனர். தழல் தட்டை முதலான கிளி விரட்டும் கருவிகளைக் கொண்டு பரணில் அமர்ந்தவாறு கிளிகளை விரட்டிக் கொண்டிருக்கின்றனர். மதியவேளையில் வெயில் தணிய, அருவியில் குளித்துப் பலவண்ண மலர்களையும் பறித்து அணிந்து கொள்கின்றனர்.

'கிள்ளை ஓப்பியும் கிளையிதழ் பறியாப்

பைவிரி அல்குற் கொய்தழை தைஇ

....... ........ ...... .......

எரியவர் உருவின் அங்குழைச் செயலைத்

தாதுபடு தண்ணிழல் இருந்தன மாக'

தலைவியும் தோழியும் தங்கள் பணிகளைப் பார்த்துக் கொண்டு இருக்க, எதிர்பாராத நிலையில் தலைவனின் வரவு நிகழ்கின்றது. தலைவனின் தோற்றம் 'இளமை நிறைந்திருந்ததாகவும் பல்வேறு மாலைகளை அணிந்தும் தனக்குரிய வேட்டை நாயுடனும் இணைந்ததாக இருக்கின்றது'. தலைவனின் வரவு சாதாரணமாக நிகழினும் அது காதலுக்கு வழிகாட்டுவதாக அமைந்து விடுகிறது. வேட்டையாடும் தொழிலைத் தலைமேற் கொண்டு வேட்டையாடி வரும் தலைவன் தான் அம்பெய்த யானை குருதியுமிழும் முகத்துடன் இவ்விடம் வந்ததா என்று தலைவியையும் தோழியையும் நோக்கிக் கேட்கிறான். எதார்த்தமான சூழ்நிலையில் தலைவியையும் தோழியையும் சந்தித்த அவன் மனத்தில் காதல் குறிப்பு எதுவும் நிகழவில்லை.

முன்பின் அறிமுகம் இல்லாத இளைஞனைப் பார்த்துப் பெண்கள் நாணம் கொள்வது இயற்கை எனினும் வனச் சூழலில் வேடன் ஒருவனை எதிரே கண்ட பெண்களின் நிலை

நாணத்திற்கு உரியதாக இருக்கிறது. 'தலைவன் பல்வகை மலர்மாலைகளையும் மார்பில் அணிந்திருக்கின்றான். மார்பில் சந்தனம் பூசியிருக்கிறான். அவன் எழுப்பிய வினாவுக்குப் பெண்கள் நாணம் கொண்டமையினால் அவனுக்கு எந்தப் பதிலும் கூறாமல் இருக்கின்றனர். அவ்வேளையில் முதன்முதலாகத் தலைவன் தலைவியின் கண்கள் சந்தித்துக் கொள்ளக் காதல் மனத்தில் தோன்றுகிறது'.

'குறிஞ்சிப்பாட்டில் தலைவன் பல்வகைப் பூக்களையும் அணிந்து கையில் வில்லேந்திய தோற்றத்தினனாக வருகிறான். அம்பு பட்ட யானை மதம் கொண்டு ஓடிவரத் தலைவியும் தோழியும் நடுக்கம் கொண்டு தலைவனைச் சார்ந்து நிற்கின்றனர். அப்போது அவன் அவர்களை நோக்கி நடுக்கம் கொள்ள வேண்டாம் என்று கூறுகின்றான். உன் அழகினை எனதாக்கிக் கொள்வேன் என்று தலைவியை நோக்கிக் கூறுகின்றான். தலைவியின் முகத்தை நோக்கிப்; புன்னகை செய்கிறான்'.

ஊழின் வழியாகச் சந்தித்துக் கொண்ட தலைவன் மனத்திலும் தலைவியின் மனத்திலும் காதல் எண்ணம் உண்டாகிறது என்பதைப் பார்வைக் குறிப்பே தெளிவுபடுத்துகின்றது. தொல்காப்பியர், காதலர்களின் காதலை அறிந்துகொள்ளக் கண்களே களமாகும் தன்மையினை,

'நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்

கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்'

என்னும் நூற்பாவால் தெளிவாக்கியிருக்கின்றார். தலைவனும் தலைவியும் இணைந்த காதல் சூழலுக்கு என்ன காரணம் என்று தெளிவுபடுத்துவது கடினம். எத்தனையோ பேர்களை வாழ்வில் சந்திக்க, கண்கள் சந்தித்துக் கொள்ள, அவர்களிடம் எல்லாம் வராத காதல் எவ்வாறு தலைவனிடம் மட்டும் வந்தது என்பது புரிந்து கொள்ள இயலாத ஒன்றாகும். அவ்வடிப்படையிலேயே தெய்வம் கூட்டுவித்த உறவு என்றும், ஊழ்வினை வாயிலாக நிகழ்ந்த உறவென்றும் அறிஞர்கள் மொழிந்தனர். தொல்காப்பியர்,

'ஒன்றே வேறே என்றிரு பால்வயின்

ஒன்றி உயர்ந்த பால தாணையின்

ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப'

என்று பாலினத்தால், ஊழால் காதல் நிகழும் என்று குறிப்பிடுகின்றார். பருவம் வந்தவர்களுக்கே காதல் வாய்க்கின்ற தன்மையினால் பருவம் வாய்த்தவர்கள் ஒருவரையொருவர் கண்டு மனத்தால் ஒன்றுபடுவதே இயற்கைப் புணர்ச்சி என்று கொள்ளப்படும். குறிஞ்சித் திணையில், தலைவன் தலைவியைக் காணும் சூழல்கள், கண்டு காதல் கொள்ளும் சூழல்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன.

## தலைவன் தலைவியின் உள்ளம் ஒன்று படல்

இயற்கைப் புணர்ச்சியில் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்ட பின்பு அவர்களின் மனம் பல்வேறு சந்திப்புகளை நாடுகின்றது. சந்திப்பில் சிந்தனைகள் ஒன்றுபடுகின்றன. இருவரின் இதயங்களும் பரிமாறிக்கொள்ளும் சிந்தனைகளால் ஒருவரைவிட்டு ஒருவர் விலக இயலாத அன்பு உருவாகிவிடுகிறது.

'யாயும் ஞாயும் யாரா கியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்

செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே'

தலைவன், தலைவியை இயற்கைப் புணர்ச்சியில் கண்டு காதல் கொண்ட பின்பு அவள் நினைவால் கட்டுண்டுபோன சிந்தனையின் வாயிலாக விளைந்த கவிதை, தலைவன் தலைவியின் அன்புடை மனங்கள் செம்மண் நிலத்தில் விழுந்த மழைநீர்போல் ஒன்றுபட்டுப் போனதை எடுத்துக்காட்டும் சான்றாக விளங்குகின்றது. தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் ஆழமாக நேசித்த பின்பு அவர்கள் மனத்தில் எழும் சிந்தனை இனி எந்நாளும் பிரியக் கூடாது என்னும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

'அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து

மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப

இம்மை மாறி மறுமை ஆயினும்

நீயா கியர்எம் கணவனை

யானா கியர்நின் நெஞ்சு நேர்பவளே'

இப்பாடலில் தலைவி, வாழ்கின்ற பிறவி முடிந்து மறுபிறவி வந்தாலும் நீயே என் கணவனாக வேண்டும். நானே உன் மார்பைச் சேர்பவளாக இருக்க வேண்டும் என்று தன் மனத்தில் அன்பால் ஊறிய ஆழமான சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றாள்.

தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் ஆழமான அன்பால் மனக் காதல் கொண்டபின் நிகழ்ந்த உள்ளச் சேர்க்கை பின்பு உடல் சேர்க்கையாக மாற்றம் பெறுகிறது. களவுக் காலத்தில் இயற்கைப் புணர்ச்சியின் பின்பு தலைவனும் தலைவியும் உடலால் இணைந்தமைக்குப் பல சங்கப் பாக்கள் சான்றாக அமைகின்றன.

வ.சுப. மாணிக்கனார், 'ஆளான தலைவன் தலைவி உள்ளம் புணர்ந்தபின் உடற் புணர்ச்சிக்கு அவாவுதல் முறையே. மனம் ஒன்றிய காதலோர் உடல் ஒன்றுதற்குத் தக்க தனியிடம் தேர்வர். இடம் வாய்ப்பின் இன்பப் பாயல் கொள்ளப் பின்வாங்கார். பெற்றோரைக் கலந்து மேல் செய்வன செய்வோம் என்னும் அறிவு ஓடார். மண் கழலினும் கடல் பொங்கினும் மலை பெயரினும் விண் வீழினும் அரசு விதிப்பினும் மக்கள் எதிர்ப்பினும் வருவது வருக என்று அச்சம் அறியார். காதல் காதல் காதல் காதல் நீங்கிற் சாதல் சாதல் சாதல் என்னும் பேராண்மை கொண்ட இளைய உள்ளங்கள் பெற்றோர்க்கு அஞ்சியோ பிற அச்சங் கொண்டோ புணர்ச்சியைத் தள்ளிப் போட எண்ணார். இடம் வாயாமையின் புணர்ச்சி நிகழாதிருக்கலாம். இடம் வாய்த்தும் தாய் துஞ்சாமை நாய் துஞ்சாமை முதலான இடையூறுகளால் புணர்ச்சி தடைப்பட்டிருக்கலாம். உள்ளம் கலந்த சின்னாட்களில் திருமணம் நடைபெற்றிருக்கலாம். களவுக்காலத்து உடற் கூட்டுறவே இல்லை என்றும், அது கூடாது என்றும் கூறுவார் கொள்கை பிழையாம். இயற்கைப் புணர்ச்சிக்கு முரணாம். கற்பு எனப்படுவது காதலர் தம் மெய்த் தொடர்புக்குப்பின் வரும் ஒழுக்கமன்று. ஒருவரையொருவர் உள்ளத்தால் நினைத்த அப்பொழுதே கற்பென்னும் திண்மை வேண்டப்படும்' என்று இயற்கைப் புணர்ச்சிக்குப் பிந்தைய நிலையைக் குறிப்பிடுவர்.

தலைவன் களவுக்காலத்தில் இரவில் யாமப் பொழுதில் கடுமையான சூழல்களைக் கடந்தே தலைவியைச் சந்திக்கிறான். யாமப் பொழுதில் அவன் தலைவியைச் சந்திக்க வருகின்ற வழி காட்டாறு, பாம்பு, கடுமையான காட்டு விலங்குகள் சூழ்ந்த தன்மையதாகும். தலைவன் இத்தனை இடர்களையும் கடந்தே தலைவியைச் சந்திக்க வருகிறான். அதனால்தான் தலைவி தோழியின் வழியாகத் தலைவன் வரும் வழியின் அருமைத்தன்மை சாற்றி இரவுப் பொழுதில் சந்திக்க வரவேண்டாம் என்று கூறுகிறாள். தலைவன் தலைவியைச் சந்திக்க இயலாத சூழல்களில் அவளின் அன்புகொண்ட மனத்தையும் அவளிடம் பெற்ற இன்பத்தையும் நினைத்துப் பார்க்கின்ற சூழல்களும் உண்டு. இதனை,

'அயத்துவளர் பைஞ்சாய் முருந்தின் அன்ன

நகைப்பொலிந் திலங்கும் எயிறுகெழு துவர்வாய்

ஆகத் தரும்பிய முலையார் பணைத்தோள்

மாத்தாட் குவளை மலர்பிணைத் தன்ன

மாயிதழ் மழைக்கண் மாஅயோளொடு

பேயும் அறியா மறையமை புணர்ச்சி'

என்னும் பாடல் உணர்த்தும்.

## இடந்தலைப்பாடு

தலைவன் தலைவியிடம் பெற்ற இன்பத்தால் மகிழ்கிறான். மீண்டும் மீண்டும் அவளிடம் இன்பம் பெறும் எண்ணத்தை மனத்தில் கொள்கிறான். அதன் காரணமாக நேற்றைக்குக் கண்ட இடத்தில் அதேபொழுதில் தலைவியைச் சந்திக்க இயலுமா என்று நினைக்கிறான். மனத்தில் காதல் மிளிர அவளை நாடிச் செல்லவும் செல்கிறான். தலைவன் மேல் கொண்ட ஆழமான அன்பும் சந்திக்கும் ஆவலும் மனத்துள் எழத் தலைவியும் அவ்விடத்திற்கு வருகிறாள். இதனை இடந்தலைப்பாடு என்றனர். வ.சுப. மாணிக்கம் இடந்தலைப்பாடு குறித்துச் சங்க இலக்கியங்களில் மூன்று பாடல்கள் கிடைப்பதாகக் கூறுகிறார் (Manikkam, 1962).

'சங்க இலக்கியப்பாக்களில் புணர்ச்சி வேட்கை காணப்படுவதன்றிப் புணர்ந்த குறிப்புச் சிறிது இப்பாடல்களில் இல்லை. இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் என்ற குறியீடுகள் காதலரிடைப் புணர்ச்சியுண்டு என்பதை வெளிப்படையாகக் காட்டுவதுபோல இடந்தலைப்பாடு என்னும் குறியீடு காட்டவில்லை. இதன் உட்கோள் என்ன? கண்டால் முயங்குதல், முயங்குவதற்கே காணுதல் என்பது ஆசைக்காமம் ஆகுமன்றி அன்புக்காமம் ஆகாது. காதலர்கள் புணர்வு விருப்பமின்றியும் கண்டுகொள்வார். காணுந்தோறும் புணர்வு மேற்கொள்ளார் என்பது (கீழான பருவ எழுச்சிக்கு இடங்கொடா) உயர்ந்த காதலாகும். இயற்கைப் புணர்ச்சியில் கண்டு கலந்த தலைவனுக்கும் தலைவிக்கும் அவ்வளவில் மனநிறைவு ஏற்படுமா? பிரிந்தபின் புணர்ந்த நினைவும் புணர்ந்தார் உருவமும் நெஞ்சை அரித்தன. புதிய பெரிய உறவை மீண்டும் ஒருமுறை களித்துக் காண்பதே இடந்தலைப்பாடு. இத்தலைப்பாட்டால் ஆறாத இளைய நெஞ்சங்கள் வேகந்தணிகின்றன. அமைதிக்கு வருகின்றன. நம்பிக்கை கொள்கின்றன'. வ.சுப. மாணிக்கனாரின் கருத்து காதலர்கள் தங்களின் உறவை நிலைப்படுத்திக் கொள்ளும் பொருட்டே மனத்தில் உள்ள

அன்பைப் பகிர்ந்து கொள்ளும் பொருட்டே இடந்தலைப்பாடு நிகழ்கிறது என்பதை முன்னிலைப்படுத்துகிறார் (Manikkam, 1962).

## முடிவுரை

பண்டைய மக்களின் வாழ்க்கை முறையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகள் அடிப்படை வாழிடங்களாக அமைந்திருந்தன. முதல், கரு, உரிப்பொருள்கள் மூன்றும் மக்களின் சமுதாய வாழ்வுக்கு நிலைக் களன்களாக அமைந்தன. சங்க அகப்பாடல்களில் அமைந்துவரும் நிகழ்வுகள் அனைத்தும் கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் என்னும் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளன. வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் ஆகிய சிறுபொழுதுகள் மக்களின் வாழ்வோடு மனநிலையோடு நெருங்கிய தொடர்பு உடையனவாக விளங்கியிருக்கின்றன. பண்டைய சமுதாய வாழ்வில் தலைவன் தலைவி களவு வாழ்க்கை சமுதாயக் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது. களவு மணம் பெரும்பான்மையும் வழக்கில் இருந்தமையினைச் சங்க இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. தலைவன் தலைவியின் சிறந்த வாழ்வியல் ஒழுகலாற்றைக் குடும்பம் பற்றிய சங்கச் சிந்தனைகள் தெளிவுபடுத்துகின்றன. பண்டையச் சமுதாயத்தில் முருகன், சிவன், திருமால், வருணன், இந்திரன், கொற்றவை வழிபாடுகள் வழக்கில் இருந்தமையினை அறியமுடிகிறது.

## References

Annithamasu, (2000) Tamilar Samugaviyal, International Institute Tamil Studies, Chennai, India

Manikkam, V.S. (1962) Tamil Kadhal, Paari Nilayam, Chennai, India

Selvam, V.T. (2002) Tamilaga Varalarum Panpadum, Manivasakar Pathippagam, Chennai, India

Sethuraman, T. (2017) Tamilnattu Samuthaya Panpattu Kalai Varalaru, New Century Book House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License